

# பனித்துளி செய்திகள்!

**“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**02.09.2019**

## 9. தள்ளப்பட்ட கல்லை வைத்து கட்டுவது, கர்த்தரின் செயல்!

‘**பு**றக்கணிக்கப்படும்’ துயரத்தால், மனமுடைந்து பின்னடையும் ஜனங்கள் இன்று ஏராளம்! தன் ஆண்டவரின் கையில் அடங்கி யிருப்பவர்களே, பிறரால் புறக்கணிக்கப்படுவது ‘‘கர்த்தரின் செயல்’’ என அறிந்திருப்பார்கள்! வீடு கட்டுகிறவர்கள் புறக்கணித்த கல், கட்டுவதற்கு ஆவதில்லை! ஆனால், புறக்கணிக்கப்பட்ட நீங்கள் ‘இது, கர்த்தரின் செயல்!’ என மகிழ்வுடன் ஏற்று குரு சென்ற ‘சிலுவையின் வழியில்’ பின்தொடர்வதால், உங்களை வைத்தே, தன் வீட்டைக் கட்டுவார்! நம் கண்களுக்கு முன்பாக நடைபெறும் இந்த ஆச்சரியம், நம் குடும்பம் கட்டப்பட, சபை கட்டப்பட நிலைத்திருப்பதாக! (மத்தேயு 21:42).

– ரத்னம்